முருகப்பெருமான் துணை

உலகம் முழுதும் உள்ள அகத்தியர் சன்மார்க்க சங்க தொண்டர்கள் மீது அளவிலாது அன்பு கொண்டு முருகப்பெருமான் அருளியதே இந்த அருட்சுவடி.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1109

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.10.2022, புதன்கிழமை

1. ஆறுமுக சக்தியே அரங்கா வாழ்க
அன்னதான வள்ளலே தேசிகா வாழ்க
மாறுதலை உலகினில் செய்வேன் என்று
மாதவ சக்தியாய் வந்த அரங்கனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 25 ம் நாள் 12.10.2022, புதன்கிழமை)
தாழ்விலா அரங்கன் தவபலம் தரணிஎங்கும்
அன்னதான பலமாக நிரம்பிவர
3. வருகின்ற அரங்கன் தர்மத்தை
வையகத்தார் வரவேற்று உலகமெங்கும் செய்ய
செய்யவே இந்த லோகம் தர்மலோகமாகி
சித்தி மிகு ஞானவான்கள் நிறைந்த
4. ஐயமிலா ஆறுமுகன் என் தலைமை கொண்ட
ஆற்றல்மிக்க ஞான லோகமாக மாறும்
மாறுதலை செய்து மகத்துவம் தர வந்த
மாதவசி அரங்கன் திருபாதம் பணிந்து
5. குருவே என உலகோர் சரணடைய
குவலயமே ஞான சித்தி காணும்
காணவே அரங்கனுக்குள் யானிருந்து அற்புதம் நடத்த
கலியுகத்தார் தொடர்ந்து ஓங்காரக்குடில் நோக்கி வந்தால் போதும்
6. போதுமப்பா உலகிற்கு மாற்றம் கிட்டும்
புண்ணியவழி உலகமெல்லாம் மாறி
ஆறுமுகன் என் ஆளுமைகொண்ட
ஆற்றல்மிக்க ஞான ஆட்சிக்காலமாக தேற்றம் பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–